Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror


www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 25 2024

திங்கட்கிழமை நவம்பர் 25, 2024 | ஒளி: 10 கதிர் 099 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# 4 நாட்களுக்கு அபாயம்

## கிழக்கு மாகாணத்தில் சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்



வங்காள விரிகுடாவில் தற்போது ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் அதன் அடுத்தகட்ட வளர்ச்சிகள் காரணமாக இன்று திங்கட்கிழமை 25ஆம் திகதி முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை பல பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கையை நீர்ப்பாசனத் துறை விடுத்துள்ளது. மல்வத்து, கலா ஓயா, கனகராயனாறு, பரங்கி ஆறு, மா ஓயா, யான் ஓயா, மஹாவலி கங்கை, மாதுரு ஓயா, முந்தேனியாறு போன்ற ஆற்றுப் படுகைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய தாழ்வான பிரதேசங்களில் சில வெள்ள நிலைமைகள் ஏற்படக் கூடும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல் ஓய பகுதிகளில் வசிப்பவர்களும் பயணிகளும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தொடர்ச்சி P2




# உயர்தர பரீட்சை இன்று ஆரம்பம்

நாடளாவிய ரீதியில் 2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளை இன்று திங்கட்கிழமை (25) ஆரம்பிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியின் பிறந்ததினம் நேற்று



மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் தலைவரான ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தனது 56ஆவது அகவையில் ஞாயிற்றுக்கிழமை (24) காலடி எடுத்து வைத்துள்ளார்.

## முட்டை விலை அதிகரிப்பு



சந்தையில் முட்டை விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த நாட்களில் 35-38 ரூபாவாக குறைக்கப்பட்ட முட்டை, தற்போது 40-45 ஆக அதிகரித்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒரு முட்டை பண்ணையில் இருந்து சந்தைக்கு மொத்த விலை 30,31 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சில வியாபாரிகள் முட்டை விலையை உயர்த்தி அதிக விலைக்கு விற்பதாக நுகர்வோர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## பொப்பி மலர் தினம்



இம்முறை ஆயுதப்படையின் நினைவுதின நிகழ்வு முப்படைகளின் தளபதி ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் அமைந்துள்ள இராணுவ வீரர்களின் நினைவுத் தூபிக்கு அருகில் திங்கட்கிழமை (24) முற்பகல் நடைபெற்றது.

தொடர்ச்சி P3

## 'அஸ்வெசும' விண்ணப்பதிற்கு அவகாசம்



அஸ்வெசும நலன்புரித் திட்ட உதவிகளை பெறுவதற்கு, இதுவரை விண்ணப்பிக்க முடியாத குடும்பங்கள் மற்றும் தனிநபர்களுக்கு விண்ணப்பிப்பதற்காக மேலும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, நாளை திங்கட்கிழமை 25ஆம் திகதி முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 02ஆம் திகதி வரை அஸ்வெசும நலன்புரித் திட்ட உதவிகளை பெறுவதற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத குடும்பங்கள் அல்லது தனிநபர்கள் உரிய பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து அந்தந்த பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அதற்கான உரிய விண்ணப்பத்தை அந்தந்த பிரதேச செயலக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது wbb.gov.lk என்ற நலன்புரி நன்மைகள் சபையின் இணையத்தளத்திற்குச் சென்று பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.


# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் திகதியை அடுத்த மாதமளவில் அறிவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதோடு, ஏற்கெனவே கோரப்பட்டுள்ள வேட்பு மனுக்கு அமைவாகவே வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஆணைக் குழு சட்ட அதிகாரம் காணப்படுகின்றது என தேர்தல்கள் ஆணைக் குழுவின் அங்கத்தவரான சட்டத்தரணி அமீர் பாயிஸ் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் கருத்துக்களை வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# எம்.பிக்களுக்கான விசேட செயலமர்வு



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான 3 நாட்கள் செயலமர்வு திங்கட்கிழமை (25) காலை 9.30 முதல் மாலை 4.30 வரை நடைபெறவுள்ளதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று நாள் செயலமர்வில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகம், பாராளுமன்ற சிறப்புரிமைகள், பாராளுமன்றத்தின் சட்டவாக்க செயற்பாடுகள், பாராளுமன்ற குழு முறைமை, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள், அரசியலமைப்பின் ஏற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# ஜனாபதிக்கு 10 அம்ச கோரிக்கை கடிதம்

புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதன் ஊடாக இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வினைக் காணுதல் உட்பட பத்து அம்சங்களை முன்வைத்து சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான ஜயசூரிய கடிதமொன்றை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதியின் இந்திய விஜயம்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் இந்திய விஜயம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் இடம்பெறும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும், உறுதியான திகதி உள்ளிட்ட விடயங்கள் இதுவரையில் இறுதிப்படுத்தப்பட வில்லை. எவ்வாறாயினும், இலங்கையின் பார்வையில் ஜனாதிபதியின் இந்திய விஜயம் மிகவும் முக்கியமானதாகும்.

தொடர்ச்சி P2

## அர்ச்சுனாவின் விசாரணைகள் ஆரம்பமாகவில்லை



பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ராமநாதனின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் அவருக்கு எதிராக சி.ஐ.டியினரிடம் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் இன்னும் ஆரம்பமாகவில்லை என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்டுவ தெரிவித்துள்ளார்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர் முகநூலில் பதிவு செய்த கருத்து தொடர்பில் சிவில் சமூக பிரதிநிதிகள் சிலர் சி.ஐ.டியினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

அரச கடன் முகாமைத்துவ சட்டத்தை திங்கட்கிழமை (25) முதல் அமுல்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலானது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

அரச கடன் முகாமைத்துவ சட்டமூலம் கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# "மாவீரர்களை வைத்து அரசியல் செய்கின்றனர்"



வ.சக்தி

மாவீரர்களுக்கு உரிய அஞ்சலி செலுத்துகின்ற மாதத்தில் எங்களுடைய மக்கள் ஒன்றிணைந்து மாவீரர் துகிலும் இல்லங்களைத் துப்புரவு செய்து வருகின்றார்கள். இவற்றைவிடச் சிலர் மாவீரர் துயிலும் இல்லங்களையும், மாவீரர்களையும் வைத்து அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ச்சி P2

# 'லாப்ஸ்' எரிவாயு தட்டுப்பாடு



நாடு முழுவதும் லாப்ஸ் எரிவாயு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், வீடுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் 3,000 மெட்ரிக் தொன் எரிவாயுவை, மாதாந்த அடிப்படையில் விநியோகம் செய்வதை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

சமையல் எரிவாயு வழங்கும் முக்கிய நிறுவனங்களில் ஒன்றான Laugfs Gas PLCக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 4 நாட்களுக்கு அபாயம்

தனிடையே, தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று 25ஆம் திகதிக்குள் தென்மேற்கு வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் இந்திய விஜயம்

இதற்கு பிரதான காரணம், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் டெல்லி விஜயத்தை ஒட்டுமொத்த சர்வதேச சமூகமும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

இலங்கை - இந்திய இணைப்புத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுடன் கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்கள் குறித்து இருதரப்பு பேச்சுக்களில் முக்கிய விடயமாகக் கருதப்படும்.

குறிப்பாக, ரணிலின் காலத்தில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் ஒப்பந்தம், திருமலை பொருளாதார வலயத் திட்டம், மன்னாரில் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் பணியை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்கியமை உட்பட கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்தி திட்டமும் அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் இந்த ஒப்பந்தங்களை மீளாய்வு செய்வதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அறிவித்திருந்தார்.

மேலும், இலங்கையின் எரிசக்தி துறையில் ஏகோபித்த உரிமையைப் பெறுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் இந்திய விஜயத்திற்கு முன்னர் இவ்வாறான அறிவிப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையானது இருதரப்பு பேச்சுக்களில் இந்திய முதலீடுகள் தொடர்பில் முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்படும் விடயங்களாக இருக்கும்.

மறுபுறம், இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பை இந்தியா கடந்த காலத்திலிருந்து உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. குறிப்பாக இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் செல்வாக்கு இந்தியாவுக்கு எரிச்சல் ஊட்டும் விடயமாகவே உள்ளது.

இதனாலேயே, இலங்கையுடன் சீனா நெருக்கமாகச் செயற்படுவதற்கும், சீனப் போர்க்கப்பல்கள் மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலுக்குள் நுழைவதற்குச் சீனா அனுமதிப்பதற்கும் இந்தியா எப்போதும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

2015ஆம் ஆண்டிலிருந்து இந்தியா பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு இத்தகைய எதிர்ப்புகளைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளது. மேலும், சில சந்தர்ப்பங்களில் ஆட்சி மாற்றங்களுக்குக் கூட இந்த எதிர்ப்புகள் வழிவகுத்தன.

இதனாலேயே இந்த டிசம்பர் மாதம் வரை சீனக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிப்பதற்குத் தடை விதிக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

எனவே, ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது, சீன விவகாரம் மற்றும் இருதரப்பு இணைப்பு திட்டங்களின் எதிர்காலம் போன்ற தலைப்புகள் முக்கியத்துவம் பெற்றிருக்கும்.

அதேபோன்று, சீன - இந்திய நெருக்கடிகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நீண்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# “மாவீரர்களை வைத்து...

இவ்வாறான அரசியல் நோக்கம் கொண்டு செயற்படுவது எமது நோக்கம் அல்ல என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - குருமண்வெளியில் ஞாயிற்றுக்கிழமை (24) நடைபெற்ற வரவேற்பு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே இரா. சாணக்கியன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இம்மாத 27ஆம் திகதி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மக்களோடு மக்களாக இருந்து நாங்களும் செயற்படுவோம். அந்த வீர மறவர்களுக்காக நாங்களும் மக்களோடு இருப்போம். மாறாக மாவீரர்களை வைத்து நாங்கள் அரசியல் செய்யப் போவது அல்ல. பலர் மாவீரர் குடும்பங்களைக் கௌரவிப்புச் செய்கின்றோம் என பலரிடம் பணம் பெற்றுள்ளார்கள் இதில் மக்கள் இதில் அவதானமாக இருக்க வேண்டும்.

அரசியல்வாதிகளாக உள்ள நாங்கள் செய்ய வேண்டிய பணி அஞ்சலி நிகழ்வுகளைச் செய்யும்போது மக்களுக்கு அச்சுறுத்தல்கள் வருமாறு இருந்தால், நாங்கள் அதைப் பற்றித் தட்டிக் கேட்க வேண்டும். தனி நாட்டுக்காகப் போராடிய ஒரு இனம். அந்தப் போராட்டத்திற்காக வாழ்க்கை அர்ப்பணித்தவர்களுக்கு நாங்கள் செய்ய வேண்டிய நன்றிக்கடன் இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்காக அரசியல் தீர்வு ஒன்றினை கோரி பயணிப்பது மட்டும்தான். அதனை நாங்கள் தமிழரசுக் கட்சியாக முன்னெடுப்போம்.

அரசியல் தீர்வு வந்தால் மாத்திரம் தான் இந்த நாட்டிலே எமது தமிழ் மக்கள் உரிமையோடு கௌரவமாகத் தலைநிமிர்ந்து வாழலாம். இந்த நாட்டில் அரசியல் தீர்வு வந்தால் மாத்திரம்தான் அபிவிருத்தி, நாங்கள் விரும்பும் தேவைகளைச் செய்து கொள்ளலாம். இல்லையேல் தென்னிலங்கை அரசாங்கம் போடும் பிச்சையிலே தான் வாழ வேண்டும்.

இலங்கையில் உள்ள தேர்தல் மாவட்டங்களில் தமிழ் மக்கள் சரியாக வாக்களித்த மாவட்டம் ஒரே ஒரு மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரம்தான். ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவருடன் கைலாங்கு கொடுத்த பிறகு அவர் என்னிடம் தெரிவித்தார் மட்டக்களப்பில் மாத்திரம் தான் எம்மால் முடியாமல் போய் விட்டது என்று சொன்னார். நான் அதற்குப் பதிலளித்தேன் அது என்னுடைய கையில்தான் இருக்கிறது. நாங்கள் கள்ள வழியில் செல்பவர்கள் இல்லை, நாங்கள் கொலை செய்தவர்கள் இல்லை, நாங்கள் களவுகளில் ஈடுபட்டவர்கள் இல்லை, மக்களுக்கு முன் அவதூறாகச் செயற்பட்டவர்கள் நாங்கள் இல்லை என தெரிவித்தேன் என அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

# எம்.பிக்களுக்கான விசேட செயலமர்வு

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலத்திரனியல் வாக்களிப்பு முறை குறித்த நடைமுறை அமர்வொன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன், ஊழலுக்கு எதிரான சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்தும், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் பாராளுமன்ற விவகாரப் பிரிவின் பங்கு குறித்தும் இங்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது.

மேலும், பாராளுமன்றத்தின் திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளின் தலைவர்கள், அந்தந்தப் பிரிவுகளின் மூலம் பாராளுமன்றச் செயற்பாடுகளில் உறுப்பினர்களின் பங்களிப்புகள் மற்றும் பணிகள் குறித்து உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

இந்த செயலமர்வு நிகழ்வில், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல, பிரதி சபாநாயகர் வைத்தியகலாநிதி மொஹமட் ரிஸ்வி சாலி, குழுக்களின் பிரதித் தவிசாளர் ஹேமாலி வீரசேகர, சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் வைத்திய கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ, பாராளுமன்ற செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம் மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் உள்ளிட்டவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த செயலமர்வில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகம், பாராளுமன்ற சிறப்புரிமைகள், பாராளுமன்றத்தின் சட்டவாக்க செயற்பாடுகள், பாராளுமன்ற குழு முறைமை, பாராளுமன்ற நிலையியல் கட்டளைகள், அரசியலமைப்பின் ஏற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

அரசு சார்பில் கடன் பெறுதல், கடன் வழங்குதல் மற்றும் பொதுக்கடன் வழங்குதல், கடன் முகாமைத்துவ அலுவலகம் அமைத்தல் ஆகிய பணிகள் இந்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# ஜனாபதிக்கு 10 அம்ச கோரிக்கை கடிதம்

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்கள் வழங்கிய ஆணையை அனைத்து தரப்பினரும் மதிக்க வேண்டும் என்பதோடு, நாட்டில் தேசிய ஒற்றுமை, சாந்தி, சமாதானத்தினை நிலைபெறச்செய்து சுபீட்சமான நாட்டில் அனைவரும் அச்சமின்றி இலங்கையர்களாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

அதனடிப்படையில் பின்வரும் விடயங்களில் அதிகமான கவனத்தினைக் கொள்கின்றேன். குறித்த விடயங்கள் வருமாறு,

1. ஜனாதிபதி மற்றும் பிரதமர் அரசாங்கத்தின் முதற் செயல்பாடாக நாட்டின் ஜனரஞ்சக கட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் சட்டத்தை மதிக்கும், திறமையான பொது நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். விசேடமாக இலங்கையில் 14 பேருக்கு ஒரு அரச ஊழியர் என்ற விகிதம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

2. நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல் ஆகியவற்றைத் தாமமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும்.

3. புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய அரசியலமைப்பு தொடர்பில் எட்டாவது ஆவது பாராளுமன்றம் சிறப்பான பணியை செய்துள்ளது. லால் விஜேநாயக்க மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவராக இருந்ததோடு மட்டுமன்றி, அரசியலமைப்புக்கான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தவராகவும் உள்ளார். அந்த வகையில் தற்போதைய தருணத்தில் அந்தச் செயற்பாட்டில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே முடிக்க வேண்டியுள்ளதால் அந்த விடயத்திலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

4. தேசிய இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும். தேசியப் பிரச்சினைக்குச் சமஷ்டித் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வரலாற்றில் முதல் தடவையாக வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே, இந்த சிறந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாது எதிர்கால சந்ததியினரைக் கவனம் செலுத்தி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

5. இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராகப் போராட வேண்டும் என்பதோடு அதற்குத் தேவையான சட்டங்களை இயற்றுதல் முக்கியமானதாகின்றது.

6. அடுத்துவரும் காலத்தில் இரண்டு தேர்தல்கள் நடைபெறவுள்ளதால், தேர்தல் முறைமைகள் மற்றும் விதிமுறைகளைத் திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட முன்னாள் நீதியரசர் பிரியசாத் டெப் கமிஷன் தலைமையிலான தேர்தல் சட்டத் திருத்தத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழு) அறிக்கையை வெளிப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானது.

7. பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்டுள்ள துறைசார் மேற்பார்வைக் குழுக்களை வலுவாகச் செயற்படுத்தப்படும்

8. அனைத்து சமூகத்தால் வெறுப்படைந்த கட்சி தாவுகின்ற செயற்பாடுகளைத் தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

9. நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இரத்து செய்தல். இந்த விடயத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலத்தின் போது, ஜனாதிபதியாகிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இறுதிக்கட்டமாக அமையும் என்று பல சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கொள்கை அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். நிறைவேற்று அதிகாரத்தை திடீரென ஒழிக்க முடியாவிட்டாலும், அரசாங்கத்தின் இருப்பை ஒருகுறித்த திகதியைச் சாதாரண பொதுமக்களுக்கு வாக்குறுதியை வழங்கினால் அது அரசாங்கத்தின் கௌரவத்திற்கும் ஜனாதிபதியின் நற்பெயருக்கும் மேலும் வழிவகுக்கும்.

10. பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கம். சம்பந்தமான கோவை 25 ஆண்டுகளுக்குப் பிறகு, 8ஆவது பாராளுமன்றத்தில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீட்டு முறைமை தயாரிக்க முடிந்தது. பிமல் ரத்நாயக்க மிகவும் பெறுமதியான பணியைச் செய்தார். அதன் அடிப்படையில் ஒழுக்கக் கோவையின் சிலவிதிகளை உள்வாங்க முடியும். இல்லையேல் அவற்றை முழுமையாக அமுலாக்க முடியும்.

மேலும், 2015ஆம் ஆண்டு வரை நிலவிய சர்வாதிகார ஆட்சியை மாற்றுவதற்கு வணக்கத்திற்குரிய மாதுலுவே சோபித தேரரின் தலைமையில் சமூகத்திற்கான தேசிய இயக்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. அந்த வகையில் தற்போதும் நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டையும், அனைவரும் இலங்கையர்களாகவும் வாழ்வதற்காக நாம் எந்தவிதமான அரசியல் இணைந்து செயற்பட்டதை நாம் நினைவுகூருகின்றோம். எமக்கு எந்தவொரு அரசியல் நோக்கங்களும் இல்லை என்பதோடு இந்தப் பணியை முன்னெடுப்பது மிகவும் அவசியமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# உயர்தர பரீட்சை இன்று ஆரம்பம்

இன்று ஆரம்பமாகும் உயர்தரப் பரீட்சைக்காக சுமார் 2,312 பரீட்சை நிலையங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், இப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இம்முறை பரீட்சைக்கு 333,183 மாணவர்கள் தோற்றவுள்ளதுடன், அவர்களில் 253,390 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் ஆவர், 79,795 தனியார் பரீட்சார்த்திகள் ஆவர்.

இதேவளை, உயர்தரப் பரீட்சை காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காகவும், பரீட்சையை இடையூறு இன்றி நடத்துவதற்காகவும் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் வரும் வாரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் கணித்துள்ளது.

எனவே, பரீட்சை காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த சூழ்நிலைகளை தவிர்த்து மாணவர்கள் பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் நல்ல சூழலை உருவாக்குவதற்காக இந்த நடவடிக்கை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவியுடன் எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சை காலத்தில் பரீட்சார்த்திகள் மற்றும் பரீட்சை கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு ஏற்படக்கூடிய தடைகளைத் தவிர்ப்பதற்காக அவசரகால பதில் ஒருங்கிணைப்பு பொறிமுறையை வலுப்படுத்தவும் இந்த கூட்டுத் திட்டம் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதைத் தடுக்கும் வகையில் ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட நிலையத்தை அடைவதற்கான உதவிகளைப் பெறுவதற்கு சில தொலைபேசி இலக்கங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அவசர இலக்கமான 117 அல்லது விசேட ஒருங்கிணைந்த அவசர செயற்பாட்டு அறை இலக்கங்களான 0113 668 020 / 0113 668 100 அல்லது 0113 668 013 / 0113 668 010 மற்றும் 076 3 117 117 ஆகிய இலக்கங்களுக்கு அழைக்க முடியும்.

பரீட்சை திணைக்களத்தின் அவசர இலக்கமான 1911 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் அது குறித்து அறிவிப்பதன் ஊடாக உடனடியாக நிலைமையை தவிர்ப்பதற்கு தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ள முடியும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மேலும், உயர்தரப் பரீட்சையின் போது, உதவி அதிபர்கள் அல்லது ஊழியர்கள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதியில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் அறிவிப்பு

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்கள் ஏலவே கோரப்பட்டுக் கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. எனினும், குறித்த காலத்தில் தேர்தலை நடத்துவதற்கான நிதி திறைசேரியில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

இதனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலைமைகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து, தேர்தல் நடத்தப்படாமைக்கு எதிராகப் பிரஜைகளால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்ப்பு அமைவாக, ஏற்கெனவே வேட்புமனுக்கள் கோரப்பட்டுள்ள நிலையில் அதன் தொடர்ச்சியாக தேர்தலை முன்னெடுப்பதற்கே ஆணைக்குழுவுக்கு சட்டரீதியான அதிகாரம் காணப்படுகின்றது.

அத்துடன், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை அடுத்து நாம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போது 30-35 நாட்களுக்கு இடைப்பட்ட காலம் தேர்தலை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு தேவையென்று குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது, ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் மாதமளவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் திகதியை அறிவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். பெரும்பாலும் எதிர்வரும் வருடத்தின் முதலிரு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படுவதற்கே வாய்ப்புக்கள் உள்ளன என்றார்.

# அர்ச்சுனாவின் விசாரணைகள் ஆரம்பமாகவில்லை

பாராளுமன்ற உறுப்பினரின் கருத்துக்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். எனினும், விசாரணைகள் ஆரம்பமாகவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வாரத்திற்குள் நாங்கள் இதனை முழுமையாக ஆராய வேண்டும் என தெரிவித்துள்ள அவர், சி.ஐ.டியின் இயக்குநரிடம் முறைப்பாட்டைச் சமர்ப்பித்துள்ளனர், சி.ஐ.டியினர் அடுத்த சில நாட்களில் இது குறித்துத் தீர்மானிப்பார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

# ‘லாப்ஸ்’ எரிவாயு தட்டுப்பாடு

இது தொடர்பில், வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சமையல் எரிவாயு வழங்குநர் குறைந்தபட்சம் 7,500 மெட்ரிக் டன் எல்.பி. (LP) எரிவாயு இருப்பை கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்

உள்நாட்டு சந்தைக்கு எல்.பி. எரிவாயு தட்டுப்பாடு இல்லாமல் விநியோகம் செய்ய இது அவசியமானது.

இந்தநிலையில், 9,000 மெற்றிக் தொன் எரிவாயுவை Laugfs Gas PLC நிறுவனம் அடுத்த மூன்று மாதங்களுக்கு உள்நாட்டு விற்பனைக்கு அனுமதிக்கவேண்டும்.

இது கடந்த வெள்ளிக்கிழமை முதல் அடுத்த ஆண்டு பெப்ரவரி 21 வரை நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொப்பி மலர் தினம்



'ஆயுதப்படையின் நினைவு தினம்-2024' நிகழ்வானது முப்படைகளின் தளபதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில், கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் அமைந்துள்ள இராணுவ வீரர்களின் நினைவு தூபிக்கு அருகாமையில் ஞாயிற்றுக்கிழமை (24) முற்பகல் நடைபெற்றது.

முதலாம் உலகப் போரில் இருந்து இன்று வரை தாய்நாட்டின் பாதுகாப்பிற்காக உயிர்த் தியாகம் செய்த சிப்பாய்களை நினைவுகூரும் முகமாக இலங்கை இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்றோர் சங்கத்தினால் இராணுவத்தினர் ஒத்துழைப்புடன் வருடாந்தம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சர்வமத வழிபாடுகளின் பின்னர் உயிர்த் தியாகம் செய்த வீரர்களை நினைவுகூரும் வகையில், இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், இலங்கை இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்றோர் சங்கத்தின் பிரதிநிதிகள் இராணுவ நினைவு தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

















# "நாம் உண்டு நம் வேலை உண்டென இருக்கின்றார்கள்"

உடபுஸ்ஸல்லாவ- கோணகலை மற்றும் ராகல ஆகிய காரியாலயங்களுக்கு உட்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாவட்டத் தலைவர், தலைவி மற்றும் தோட்டக் குழுத் தலைவர், தலைவிமார்களுடனான சந்திப்பானது சனிக்கிழமை(23) இடம்பெற்றது.



ராகல சானிகா கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த இச்சந்திப்பின் போது, நடந்து முடிந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் இ.தொ.காவிற்கு வாக்களித்த அனைத்து ஆதரவாளர்களுக்கும் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாகத் தெரிவித்திருந்தார்.

அதேபோல், எதிர்வரும் காலங்களில் இ.தொ.காவின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றிணைந்து எவ்வாறு செயற்படுவது, அதன் மூலமாக எவ்வாறான வெற்றியினை பெற்றுக்கொள்வது என்று விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இச் சந்திப்பில் இ.தொ.கா. பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், பிரதி தலைவர் கணபதி கணகராஜ், முன்னாள் நுவரெலியா பிரதேசசபை தலைவர் வேலு யோகராஜ், காரியால உத்தியோகத்தர்கள் உட்பட கட்சியின் முக்கியஸ்த்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களில் தெரிவித்ததைப்போல் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் கட்சியில் மாற்றங்களை மேற்கொள்ள இருக்கின்றோம். இம் மாற்றங்களினூடாகவே தொடர்ந்து செயற்படத் தயார்நிலையில் இருக்கின்றோம். இதுவே காலத்தின் தேவைப்பாடும் ஆகும்.

இ.தொ.காவின் பொதுச்செயலாளர் என்ற பதவி அங்கீகாரமானது இ.தொ.காட்சியின் ஸ்தாபனத்தை மற்றும் சின்னத்தைப் பாதுகாக்க வேண்டும் அதேபோல், மலையகத்தையும் பாதுகாக்க வேண்டும். எனவே, தான் நாம் நன்கு சிந்தித்து தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அதேநேரம், பாராளுமன்ற ஆசனத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற பாரிய நோக்கத்துடனே நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் யானை சின்னத்தைத் தேர்ந்தெடுத்தோம்.

மேலும், கடந்த 2020ஆம் ஆண்டு பாராளுமன்ற பொதுத்தேர்தலில் மலையகத்தைப் பிரதிநித்துவம் செய்யும் அனைத்து கட்சிகளும் தனது மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. நாமும் இரண்டு ஆசனங்களைப் பெற்றுக்கொண்டோம். அது தற்போது ஒரு ஆசனம் ஆகியது. அதற்குக் காரணம் எமது ஆளுமை இன்மை அல்ல. சிலரின் சூழ்ச்சி ஆகும் இதை நாம் அனைவரும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

இதனை நினைத்து நாம் கவலைகொள்ளத் தேவையில்லை.

அத்தோடு, ஆறு உறுப்பினர்களை வென்றெடுத்த மலையக கட்சி தற்போது இரண்டு உறுப்பினர்களையே தன்வசமாக்கி நாம் உண்டு நம் வேலை உண்டு என்று இருக்கின்றார்கள். அதேபோல் சஜித் பிரேமதாச அவர்கள் 60 உறுப்பினர்கள் வைத்திருந்தவர் தற்போது 35 ஆசனங்களை வென்றெடுத்து கவலை இன்றி எதிர்க்கட்சி தலைவர் ஆசனத்தில் அமர்ந்து இருக்கிறார்.

இவை அனைத்தும் சரி மஹிந்த ராஜபக்ஷ 153 ஆசனங்களை வைத்திருந்தவர் இன்று மூன்று ஆசனத்தை வைத்திருக்கிறார்.

இவர்களே இவ்வாறு செயற்படும்போது, நாம் நடந்தவையை நினைத்து கவலைகொள்ளாமல் எதிர்காலத்தினை நோக்கிய பயணத்தை வெற்றிகொள்வோம்.

இறந்து போன யானைக்கு 53 நாட்களில் உயிர் கொடுத்து இருக்கிறோம். இதை நினைத்து நாம் பெருமை கொள்ள வேண்டும். இதைவிடுத்து நாம் கவலை கொள்ளத் தேவையில்லை.

159 ஆசனங்களைப் பெற்று அரசாங்கத்தை ஆளும் ஜனாதிபதி கூறி இருக்கின்றார். மலையகத்தை மாற்றுவோம். என்று எனவே நாம் அந்நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

## 18 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை





எஸ்.கணேசன்

கொட்டகலை நகரில் சுகாதார நடைமுறைகளை மீறும் வகையிலான வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட உணவகம், சில்லறைக் கடைகள் மற்றும் மொத்த வியாபாரிகளுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதார பரிசோதர்களாலேயே 18 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொட்டகலை நகருக்கு வரும் வாடிக்கையாளர்களுக்குச் சுகாதார பாதுகாப்புடனான உணவுகள் மற்றும் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்தால் திடீர் சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, கொட்டகலை பிரதேச சபையிடம் வர்த்தக அனுமதிப் பத்திரம் பெறாமல், சுகாதாரமற்ற முறையில் உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களை நடத்திவந்த 18 உரிமையாளர்கள் கண்டறியப்பட்டதுடன், சுகாதார பாதுகாப்பற்ற பல உணவுப் பொருட்களும் இதன்போது அழிக்கப்பட்டன.

## பதுளை விபத்தில் மற்றுமொரு மாணவனும் உயிரிழப்பு

கடந்த முதலாம் திகதி கொழும்பிலிருந்து பதுளைக்கு களப்பயிற்சிக்காகச் சென்ற வேளையில் போது, பேருந்து விபத்துக்குள்ளானதில் காயமடைந்திருந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பயிலும், யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த, கைலைநாதன் சிந்துஜன் என்பவரே 23 நாட்களின் பின் சிகிச்சை பலனின்றி இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



இந்த விபத்தில் முன்னதாக நான்கு பேர் உயிரிழந்திருந்தனர். இதையடுத்து, குறித்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது.

பேருந்தில் சென்ற சாரதி உட்பட 36 பேர் காயமடைந்திருந்தனர். காயமடைந்தவர்கள் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் படுகாயமடைந்திருந்த 6 பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

படுகாயமடைந்திருந்த சிந்துஜன் கடந்த வாரம் இரத்மலானையில் அமைந்துள்ள பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை(24) அதிகாலை 5.30 மணியளவில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

## நில மீட்பு செயற்றிட்ட செயலமர்வு



திருகோணமலை மாவட்டத்தில் நில உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை உரிமை, தேசிய மற்றும் சர்வதேச பரிந்துரைகளை மேற்கொள்ளலும், மனித உரிமை முறைப்பாடுகளை மேற்கொள்ளும் முறைமை தொடர்பான பயிற்சி செயலமர்வு திருகோணமலை மாவட்டத்தின் மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் இசைடீனினால் ஞாயிற்றுக்கிழமை (24) மேற்கொள்ளப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி மற்றும் மூதூர் பிரதேசங்களில் இடம்பெற்ற நில சுவீகரிப்புகளால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலங்களை மீட்கும் செயற்றிட்டத்தின் இரண்டாம் அமர்வாக இச் செயலமர்வு ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில், நிறுவனத்தின் இணைப்பாளர், பிரதி இணைப்பாளர், திட்ட முகாமையாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் 45ற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## தோட்டத் தொழிலாளர்கள் மீது குளவி கொட்டு

எஸ்.கணேசன்

தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தோட்டத் தொழிலாளர்கள் எழுவர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் சனிக்கிழமை (23) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெரேசியா தோட்டத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குளவிக்கொட்டால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எழுவரில் இருவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைப்பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும் ஏனைய ஐவர் வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சைப்பெற்று வருவதாகவும் வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேயிலை மரத்தடியில் இருந்த குளவிக்கூடொன்று, கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண்ணொருவரின் கால்பட்டதாலேயே கலைந்துள்ளதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


## இவர்களைக் கண்டால் உடன் அறிவிக்கவும்

மினுவாங்கொடையில் கடந்த 18ஆம் திகதியன்று பணமாற்று நிறுவனமொன்றுக்குச் சொந்தமான வேனிலிருந்தவர்களை மிரட்டி, சுமார் 75 மில்லியன் ரூபாவை அபகரித்துச் சென்ற இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்ய பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கொள்ளையிட்ட பணத்துடன் தப்பிச் சென்றுள்ள சந்தேகநபர்களை கைது செய்ய கம்பஹா குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். கட்டான மற்றும் உடுகம்பொல பிரதேசங்களைச் சேர்ந்த முறையே 37 மற்றும் 40 வயதுடைய இரு சந்தேக நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சந்தேக நபர்களின் இருப்பிடம் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாரை 071-8591608 அல்லது 071-8591610 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.





# அரிசி இறக்குமதி மட்டும் தான் இந்த அரசினதும் தீர்வா?

இலங்கை அரிசி நுகர்வில் தங்கியிருக்கும் நாடு. நாட்டின் பெரும்பாலும் அனைத்து மக்களும் தமது ஒரு வேளை உணவையேனும் அரிசிச் சோற்றை உட்கொள்வது பாரம்பரிய வழமை. இவ்வாறான நெற் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கு அரசாங்கத்தினால் மானிய அடிப்படையில் கடன் உதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றமை வழமை.

இவ்வாறிருக்க ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட காலப்பகுதியில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவது வழமையாகிவிட்டது. இம்முறை சந்தையில் நாட்டரசிக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. வழமையாக அவ்வாறான தட்டுப்பாட்டு நிலை எழும் போது சம்பந்தப்பட்ட வர்த்தக அமைச்சை சேர்ந்த அமைச்சர்கள் ஊடகங்களை அழைத்து, தாம் அரிசி உற்பத்தி ஆலைகளின் தலைமை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அரிசியைச் சந்தையில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறி, நிர்ணய விலையை அறிவித்தாலும், சந்தையில் அரசாங்கம் கூறும் விலைக்கு அரிசியை வாங்க முடியாத நிலையே பெரும்பாலும் இருக்கும்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் சதொச விற்பனையகங்களில் இந்த விலைக்கு அரிசி கிடைத்தாலும், நாட்டின் அனைத்து மக்களுக்கும் இவற்றுக்குச் சென்று அரிசி வாங்க முடியாத நிலை நிலவுகின்றது. அந்த நிலை தமது கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் சந்தர்ப்பங்களில், அரிசி இறக்குமதி என்பதை அறிவிப்பதை அரசாங்கம் வழமையாகக் கொண்டுள்ளது.

இம்முறை புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்கமும் அவ்வாறான ஒரு தீர்மானத்தையே மேற்கொண்டுள்ளது. இது அவர்களின் முதல் தடவை என்பதால், இந்த நடவடிக்கை எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடருமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் கடன் வசதிகள் வழங்கப்படுவது வரவேற்கத்தக்க விடயம் எனும் போதிலும், அந்த கடன்களை பெற்றுக்கொடுக்கும் அமைப்புகள், விவசாய அமைச்சு, கிராமிய மட்டத்தில் இந்தச் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் சங்கங்கள் போன்றன ஒவ்வொரு பிரதேசத்திலும் எந்தளவு நெல் பயிர் செய்யப்படுகின்றது, அதிலிருந்து எந்தளவு விளைச்சல் பெறப்படுகின்றது என்பது பற்றிய தரவுகளைச் சீராகக் கொண்டிருக்க வேண்டும். இதுவரையில் அவ்வாறான தரவுகள் இல்லை என்பது நிர்வாகத்தின் ஒழுங்கின் மீது சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது. இவற்றுக்குப் பொறுப்பானவர்களுக்கு பொது மக்களின் வரிப்பணத்திலிருந்து சம்பளம் வழங்கப்படுகின்றது. சம்பளத்தைப் பெற்று இந்த தரவுகளைப் பெறாமல் தமது பணியை மேற்கொள்வதிலிருந்து விலகியிருக்கின்றனரா எனும் சந்தேகமும் எழுகின்றது.

இவ்வாறிருக்க, புதிதாக ஆட்சிபீடமேறியுள்ள அரசாங்கம் உள்நாட்டு உற்பத்திகளுக்கு முக்கியத்துவமளிக்கும் கொள்கையை கொண்டிருக்கும் நிலையில், நிர்வாக சீர்கேடுகளைச் சீரமைத்து, எதிர்காலத்திலாவது அரிசி உற்பத்தியில் தன்னிறைவு காணும் நாட்டை கட்டியெழுப்ப பங்களிப்பு வழங்குவார்களாக என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

சிரிக்காதவன் தன்னைச் சுருக்கிக்கொள்கின்றார். அக உணர்வினூடாக ஏற்படும் கிளர்ச்சி, புன்னகை, சிரிப்பாகப் பரிணமிக்கின்றது.

நகைப்பூட்டும் விடயங்களைக் கேட்கும் போதும் குழந்தைகளின் குறும்பை முறுவல்களை நோக்கும் போதும் மெல்லிய சிரிப்பு தானாகவே உருவாகின்றது.

சிலர் நகைச்சுவைகளைக் கேட்டதுமே பலத்தை ஓசையுடன் சிரிப்பதுண்டு. திரைப்படங்களில் வில்லன்களின் பார்வையுடன் கூடிய நகைப்பு சற்று வித்தியாசமானது. அடக்கமுடியாத தொடரான சிரிப்பும் ஒருரகம்.

ரசனை உள்ள விஷயங்களைக் கூட சிலர் கண்டு கொள்ளவே மாட்டார்கள். உம்மென்று எதுவும் தெரியாததைப் போல இருப்பதுண்டு. இன்னும் சிலருக்கு நகைச்சுவையின் அர்த்தமும் புரிவதில்லை.

சிரிப்பு, ஆனந்தத்தின் இருப்பிடம் ஏன் பிறப்பிடமும் கூட. மனிதன் தனது வாழ்க்கையைச் சந்தோஷமாக வைத்திருக்க கலகலப்பூட்டும் வார்த்தைகளை அதன் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளவேண்டும். அர்த்தங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். கவலைகள், ஏக்கங்களைக் களையச் சுதந்திரமாக ரசனையுடன் சிரிப்பீர்களாக.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா?

லக்ஸ்மன்

இலங்கையில் நவம்பர் மாதம் தமிழ் மக்களினால் நினைவு கூரப்படுகின்ற மாவீரர் தினம், ஜே.வி.பியின் தேசிய வீரர்கள் தினம் என பல வீரர்களுக்கான கௌரவங்களைக் கொடுக்கின்ற நினைவு கூரல்களுக்குரியதான மாதமாகும்.

ஆனால், இந்த நவம்பர் மாதம் கடந்த காலங்களின் அரசியல் வரலாறுகளிலிருந்து மாற்றத்தினை ஏற்படுத்துகின்ற மாதமாகவும் இருக்கவேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்பு நிறைவேறுமா என்பது நிச்சயமில்லாததே.

நாட்டுக்குள் சிங்கள மக்களிடம் காணப்படுகின்ற புலிகளின் மீளுருவாக்கத்துக்கானதே மாவீரர் தினம் என்ற அச்சம் தமிழ் மக்கள் மாவீரர் நினைவுகூரலை நடத்துவதில் தடைகளை ஏற்படுத்துவதற்கான சூழலை உருவாக்குகிறது என்பதே உண்மையாகும்.

அதற்காகச் சொல்லப்படுகின்ற, முன்வைக்கப்படுகின்ற காரணங்கள் உண்மையில் இதனை அடியொற்றிதே என்பது அனைவருக்கும் தெரிந்ததாகும். ஆனால் பாதுகாப்புத் தரப்பினரைப் பொறுத்தவரையில், தம்முடைய சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப கடமைகளைச் சட்டத்தை முன்னிறுத்தி தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றமையினையே காணமுடிகிறது.

வடக்கிலும் கிழக்கிலும் மாவீரர் நாளுக்கான முன் ஆயத்த வேலைகளில் ஈடுபட்டவர்கள் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதே நேரத்தில், நீதிமன்றத்தின் தடையுத்தரவு வழங்கப்படும் என்றும் பொலிஸாரால் அறுவுறுத்தப்பட்டுமுள்ளனர். இது அடிப்படை நியாயங்களுடனானதா என்று தமிழர்களால் புரிந்து கொள்ளமுடியாததாகவே இருக்கிறது.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது கடந்த காலங்களைப்போலல்லாது வெறுமனே சிங்கள மக்களின் பங்களிப்புடன் மாத்திரமல்ல வடக்குக் கிழக்கின் பெரும்பான்மையான மக்களும் இதில் பங்களித்திருக்கின்றனர். அது தங்களுடைய உமைகளுக்கும் மதிப்பளிக்கப்படும், அத்துடன், தங்களுடைய நீண்டகால எதிர்பார்ப்புகளும் நிறைவேற்றப்படும் என்பதனாலேயே ஆகும்.

வெறுமனே அரசியல்வாதிகள் சொல்வதைப்போன்று பாரம்பரியமான, காலங்காலமாக தங்களை ஏமாற்றிவந்த அரசியல்வாதிகளையும், அரசியல் கட்சிகளையும் வெறுத்ததனால் மாத்திரமல்ல, என்பதுவும் இதிலுள்ள செய்தியாகும்.

2021ஆம் ஆண்டில் மாவீரர் தினம் தொடர்பான விடயங்களை முகப் புத்தகத்தில் பகிர்ந்தமை. பகிர்ந்தவர்கள் மற்றையவரின் விருப்பமின்றி அவரையும் இணைத்தமை, அவர்களின் பகிர்வுக்கு விருப்பம் தெரிவித்தமை போன்ற காரணங்களுக்காகக் கூட கைதுகள் நடைபெற்றிருந்தன.

2023 நவம்பர் 27 மாவீரர் தினத் தடைகளுக்கும், தடையுத்தரவுகளுக்கும், கைதுகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்ற பழ.நெடுமாறனின் அறிவிப்பு. பிரபாகரனின் மகள் துவாகா மாவீரர் தினத்தில் உரையாற்றுகிறார் என்ற அறிவிப்பு போன்றன காரணமாக அமைந்திருந்தன.

அது ஒருவகையில் தமிழர்களிடம் சந்தேகமாக இருந்தபோதிலும் நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது.

2022ஆம் ஆண்டில் வருடத்தில் பௌத்த பிக்குகள் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை எரித்திருந்தார்கள். அந்த எரிப்பானது 13ஐ அல்ல, ஒட்டுமொத்த நாட்டையே எரித்ததாகப் பேசப்பட்டது. ஆனால், அச்சம்பவம் மறந்துபோன விடயமானது.

‘அரகலய’ போராட்டத்தினையடுத்து ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நிகழ்த்திய அக்கிராசன உரையில் பொலிஸ் அதிகாரமற்ற, ஒற்றையாட்சிக்குள்ளே அதிகாரப் பரவலாக்கல் என்ற அடிப்படையில், அதிகாரங்களைப் பரவலாக்கிப் புரையோடிப்போயுள்ள தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக்காண வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

2023ஆம் ஆண்டு சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழர்களது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அறிவித்தார். ஆனால் அவர் 2024ஆம் ஆண்டு சுதந்திர தினம் வரையில் எதனையும் செய்து முடிக்கவில்லை.

2025ஆம் ஆண்டு சுதந்திரதினம் பெப்ரவரியில் வரவுமிருக்கிறது.

இலங்கை சுதந்திரம் பெற்ற நாடாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற போதிலும், காலங்காலமாக ஆட்சிக்கு வருகின்ற ஜனாதிபதிகளும், அரசாங்கமும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான தீர்க்கமான செயற்பாடுகள் எதனையும் முன்னெடுத்திருக்கவில்லை என்பதே வரலாறு. அதே நேரத்தில் அடக்குமுறைகள் தொடர்ந்த வண்ணமேயிருந்து வருகின்றன.

இலங்கைத் தமிழர்கள் 1948 முதல் 30 ஆண்டுகள் அகிம்சை ரீதியாக, 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுத ரீதியாகப் போராடி அப்போராட்டம் அழிக்கப்பட்ட நிலையில் 15 வருடங்கள் கடந்தும் தங்களுடைய போராட்டத்தினை எவ்வகையில், முன்னெடுப்பதென்று தெரியாமலேயே இருந்து வருகிறார்கள் என்றே சொல்லிக் கொள்ளமுடியும்.

1949ஆம் ஆண்டு பதவிக்கு வந்த இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா கிழக்கில், தமிழ், தமிழ் பேசும் மக்களைச் சிறுபான்மையினராக மாற்றுவதற்காக கல்லோயா குடியேற்றத்தை ஆரம்பித்தார். அதன் பின்னர் வந்த அரசுகளால், சேருவில, அல்லை - கந்தளாய் வரை குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அதன் மூலம், கிழக்கில் 1921ஆம் ஆண்டு 0.5 வீதமாக இருந்த சிங்கள மக்களின் விகிதாசாரம் தற்போது 24 வீதமாக மாற்றமடைந்துள்ளது.. வடக்கைப் பொறுத்தவரையில் அனுராதபுரம், வவுனியா, வெலிஓயா என குடியேற்றங்கள் முளைத்தன. ஆனால், கிழக்கைப் போல் விகிதாசாரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம்.

அதன்மூலம் ஸ்ரீ கொண்டுவரப்பட்டது. அதனால் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் உருவானது. 1958, 1978, 1983ஆம் ஆண்டுகளில், பாரிய இனக் கலவரங்கள் உருவாக்கப்பட்டன. 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரத்தின் போது, தமிழர்கள் கடல்வழியாகத் தப்பிச்செல்லவேண்டிய நிலையும் உருவாகியிருந்தது.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்தே ஆயுதப்போராட்டம் உருக்கொண்டது. வட கிழக்கில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் இணைந்தார்கள். உக்கிரமடைந்த போர் நிலைமையில் 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு மாகாண சபை அதிகாரம் உருவாக்கப்பட்டது.

ஆனால், அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் இன்றுவரை தயாராக இல்லை. இது அரசாங்கமே அரசியலமைப்பை மீறும் செயலாகுமெனக் கருத்துக்கள் பகரப்பட்டே இருக்கின்றன. ஒருவேளை இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பாதிருந்திருந்தால் போராடியே நாங்கள் தனி ஈழம் பெற்றிருப்போம், தனி நாடு மலர்ந்திருக்கும் அதனை இந்தியா தடுத்துவிட்டது என்ற ஆதங்கம் தமிழர்களுக்காகப் போராடிய விடுதலைப் போராட்ட இயக்கங்களின் மத்தியில் இப்போதும் இருக்கிறது என்றே கூறலாம்.

இது வரலாறாக இருக்க, இவ்வருடத்தின் மாவீரர் தினக் காலத்திலும் தான் ஆடா விட்டாலும் சதை ஆடும் என்பதற்கு ஒப்பாகத் தமிழர்களின் மீது பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகள் அவிழ்த்துவிடப்படுகின்ற நாகரீகமற்ற செயற்பாடாகவே பார்க்கப்படுகிறது. ஆனால், இதனை அரசாங்கத்தின் அறிவுறுத்தலில் நடைபெறுவதாக நாம் எடுத்துக்கொள்ள முடியாவிட்டாலும் வெறுமனே ஒதுக்கிவிடவும் முடியாத ஒன்றே எனலாம்.

சர்வதேச நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புக்களும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்குமாறு கூறிக் கொண்டிருக்கின்ற நிலையில், அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் நீக்கம் பற்றி எந்தவிதமான கருத்துக்களையும் உறுதியாக வெளியிடவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள், கொடுமைகளை அனுபவித்த மக்கள் தங்களுக்காக நினைவுகளை மீட்டுப்பார்ப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு மறுப்பதானது உரிமைகளைத் தட்டிக் கழிப்பதற்குச் சமமானது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அக்கிராசன உரை வெளிப்படுத்தியிருக்கின்றர். அதில், எமது நாட்டு மக்கள் நீண்ட கால கனவாகக் காணப்பட்ட தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. அரசியல் ரீதியாக எமக்குப் பல நிலைப்பாடுகள் இருக்கலாம். ஆனால், இனி இந்த நாட்டில் இனவாத அரசியலுக்கு இடமில்லை. எந்த விதத்திலும் மதவாதச் செயற்பாடுகள் எழுச்சி பெறுவதற்கும் இடமளியோம். நாம் போதுமென்ற அளவில் இனவாதத்தினால் பாதிப்பைக் கண்டிருக்கிறோம்.

ஆறுகள் நிறையக் கண்ணீரைக் கண்டிருக்கிறோம். இன்று நாட்டில் ஒவ்வொருவர் இடையிலும் குரோதமும் சந்தேகமும் அதிகளவில் வலுப்பெற்றுள்ளது. பொருளாதாரம், ஜனநாயகம் என்று பல வகையில் இருக்கலாம்.

ஆனால், இனி எவரும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இனவாத, மதவாத போராட்டங்களை முன்னெடுக்க இடமளியோம் என்று உறுதியளிக்கிறேன்” என்ற கருத்தானது அனைவராலும் முக்கியமாக நோக்கத்தக்கதாகும்.

எது எவ்வாறானாலும், கடந்த காலங்களைப் போல் ஆட்சி வேறு அதிகாரம் வேறு, நிருவாகம் வேறென்ற நிலைமைகளில்லாத மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்ற வகையில் அனைத்தினுடைய ஒருமிப்புடன் ஆட்சி நடைபெற்றால் சிறப்பே.

## கடிதங்கள்

### சுகாதார சீர்கேடான பேருந்து நிலையம்

ஹட்டன் நகரில் உள்ள பிரதான தனியார் அரச பேருந்து நிலையம் சுகாதார சீர்கேடான நிலையில் உள்ளதாக பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த பேருந்து நிலையத்திற்கு நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான மக்கள், வந்து செல்கின்றனர். அத்துடன், பிரதான பேருந்து தரிப்பிடத்தில் பல வர்த்தக நிலையங்கள், ஹோட்டல்கள் உள்ளன. பாரிய சுகாதார சீர்கேடான உள்ள இந்த கழிவறையால் அப் பகுதியில் துர் நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக தொற்று நோய் பரவும் அபாயமும் உள்ளது.

மேலும், ஹட்டன் நகர சபை முன்வந்து உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அங்கு இருக்கும் பொது கழிவறையை மூடி நவீன முறையில் கழிவறை அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– மஸ்கெலியா நிருபர்

# ESOFT Metro Campusஇனால் பரீட்சை நிலையம் அறிமுகம்




ESOFT Metro Campus இனால் கேம்பரிட்ஜ் அங்கீகாரம் பெற்ற பரீட்சை நிலையம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில், ESOFT மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஊடக மற்றும் மதிப்பாய்வுஆகியவற்றின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். இலங்கையின் மாணவர்களின் முன்னேற்றத்துக்காக மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்காக கைகோர்த்துள்ளனர்.

விசேட விருந்தினர்களில் ESOFT Metro Campus தவிசாளரும் முகாமைத்துவ பணிப்பாளருமான கலாநிதி. தயான் ராஜபக்ஷ, பிரதம நிறைவேற்று அதிகாரி நிஷான் செம்பகுட்டியாரச்சி, குழும வியாபார அபிவிருத்தி பிரதம செயற்பாட்டு அதிகாரி அமில பண்டார ஆகியோர் அடங்கியிருந்தனர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஊடக மற்றும் மதிப்பாய்வுசார்பாக முகாமைத்துவ பணிப்பாளர் தெற்காசியா அருண் ராஜாமணி மற்றும் முகாமையாளர் (ஆங்கிலம்) இலங்கை ஷப்கான் பாரிஸ் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

ஒன்றுகூடியிருந்தவர்கள் மத்தியில் கலாநிதி. தயான் ராஜபக்ச உரையாற்றும் போது, கேம்பிரிட்ஜ் அங்கீகாரம் பெற்ற பரீட்சை நிலையத்தின் அறிமுகம் என்பது, ESOFTஐ பொறுத்தமட்டில் 'வரலாற்று மைல்கல்' என குறிப்பிட்டார். இன்றைய உலகில் உறுதியான தொடர்பாடல் திறன்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை குறிப்பிட்டார்.

"இன்று முதல், ESOFT Metro Campus இனால் மாணவர்களுக்கும், அண்மையில் பாடசாலை கல்வியை பூர்த்தி செய்தவர்களுக்கும், ஆங்கிலம் பயில்வோருக்கும் மொழி ஆற்றலில் உயர்ந்த ஸ்தானத்துக்கு செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதையிட்டு மிகவும் பெருமை கொள்கின்றது. உலகளாவிய ரீதியில் வெற்றிகரமாக இயங்குவதற்கு மொழி ஆற்றல் என்பது மிகவும் முக்கியம், உறுதியான தொடர்பாடல் திறன்களினூடாக, நிபுணர் ஒருவரின் தொழில் வாழ்க்கையை உயர்த்தக்கூடியதாக இருக்கும் என்பதுடன், உலகளாவிய ரீதியில் அணுகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்" என அவர் குறிப்பிட்டார்.

இதற்கு ஆதரவாக அருண் ராஜாமணி தெரிவிக்கையில், "தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதில் ஆங்கில மொழித் திறன்கள் என்பது பெருமளவு தாக்கம் செலுத்துகின்றது. தொழில் வாய்ப்புகளைப் பெறுவதை இரட்டிப்பாக்குவதுடன், உலகளாவிய ரீதியில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கும். இந்த புதிய நிலையத்தின் ஸ்தாபிப்பில் இணைந்த முயற்சி பங்காற்றியிருந்தது. உள்நாட்டு கல்வி வழங்கல்களை சர்வதேச தரத்தில் பெற்றுக் கொடுக்கும் ESOFT இன் அர்ப்பணிப்புடன் பொருந்துவதாக அமைந்துள்ளது" என்றார்.

ESOFT Metro Campus இல் கேம்பிரிட்ஜ் அங்கீகாரம் பெற்ற பரீட்சை நிலையம் என்பது பரீட்சைக்கான நிலையம் என்பதற்கு அப்பாலானது. கல்விசார் மற்றும் நிபுணத்துவ வளர்ச்சிக்கான திறவுகோலாக அமைந்துள்ளது. ஒவ்வொரு துறையிலும் வெற்றிகரமாக இயங்குவதற்கு ஆங்கில மொழி ஆற்றல் என்பது அடிப்படை ஆளுமையாக அமைந்துள்ளது. கேம்பிரிட்ஜ் வழங்கும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட Common European Framework of Reference (CEFR)அடிப்படையிலான பரிபூரண கட்டமைப்பினூடாக, மாணவர்களுக்கு முறையான மொழிசார் ஆற்றல்கள் கட்டியெழுப்பிக் கொள்வது உறுதி செய்யப்படுகின்றது.

ESOFT Metro Campus,கேம்பிரிட்ஜ் தகைமைகளை வழங்குவதனூடாக, மாணவர்களுக்கு சர்வதேச நியமங்களை பூர்த்தி செய்யும் ஆற்றல்களை வழங்குவதுடன், உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தொழில்நிலை மற்றும் கல்விசார் முன்னேற்றங்களுக்கு கதவு திறப்பதாக அமைந்துள்ளது.

இந்த புதிய கைகோர்ப்பினூடாக, பரந்தளவு கேம்பிரிட்ஜ் ஆங்கில கற்கைகளுக்கு பயிலல் மற்றும் பரீட்சை வசதிகளை ESOFT வழங்கும். இதில் நாடு முழுவதையும் சேர்ந்த சகல 40 கிளைகளிலும் ESOFT KET, PET, FCE, C1மற்றும் TKT போன்றன அடங்கியிருக்கும். தரம் 1 முதல் 5 வரையான இளம் பயிலுனர்களுக்கு (YLE), Starters, Movers, and Flyers நிகழ்ச்சிகளும் வழங்கப்பட்டு, அரச மற்றும் பகுதியளவு அரச பாடசாலை மாணவர்களுக்கு தமது ஆங்கில ஆற்றலை மேம்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்கும்.

தற்போது KET மற்றும் PET கற்கைகள் ESOFT மாணவர்களுக்காக விசேடமாக திட்டமிடப்பட்டுள்ளன. TKT என்பது ஆசிரியர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கை முழுவதையும் சேர்ந்த பாடசாலைகள் மற்றும் மொழி நிலையங்கள் ESOFT மற்றும் இதர எந்தவொரு நிலையத்துடனும் கைகோர்த்து கேம்பிரிட்ஜ் ஆங்கில தயார்ப்படுத்தல் நிலையமாக தகைமை பெற முடியும்.

# காயங்கேணி கடல் சரணாலயத்தைப் பாதுகாக்க கொமர்ஷல் வங்கி ஆதரவு





கொமர்ஷல் வங்கியானது மட்டக்களப்பு மாவட்டத்தில் பனிச்சங்கேணிக்கும் கல்குடாவிற்கும் இடையில் அமைந்துள்ள காயங்கேணி கடற்பரப்பு சரணாலயத்தினை பாதுகாக்கும் முயற்சிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது. அதன் பிரகாரம், இலங்கை உயிரியற் பல்வகைமை (BSL) என அழைக்கப்படும் இலங்கை வர்த்தக மற்றும் உயிரியற் பல்வகைமை தளத்தின் 'எங்கள் பவளப்பாறைகளுக்கு வாழ்வு' என்ற முயற்சியில் இணைந்துள்ளது.

வனவிலங்கு பாதுகாப்புத் துறையின் வழிகாட்டுதலின் கீழ், புளூ ரிசோர்சஸ் டிரஸ்டுடன் (BRT) தொழில்நுட்ப பங்குடைமையுடன் இலங்கை உயிரியற் பல்வகைமை (BSL) நடத்தும் ஐந்தாண்டுத் திட்டம், பவளச் சுற்றுச்சூழலின் மீளெழுச்சிஇ அதன் புதுப்பித்தல்; ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகள், சமூக-பொருளாதார நல்வாழ்வு மற்றும் உள்நாட்டு சமூகங்களின் மேம்பாட்டிற்கு பங்களிக்கின்றன.

953 ஹெக்டேர் பரப்பளவில், காயங்கேணி சரணாலயம் 2019 இல் விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கூட்டொழுங்கு முறையின் கீழ் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது, இச்சரணாலயமானது அதன் நீண்ட கால உயிர்வாழ்வை பாதிக்கும் வகையில் மனிதனால் உருவாக்கப்பட்ட மற்றும் இயற்கையான குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கிறது. BSLஇன் கூற்றுக்கிணங்க, ஏற்றுமதி சார்ந்த மீன்வளம், குரூப்பர்கள், ஸ்னாப்பர்கள் மற்றும் கிளிமீன்கள் போன்ற இனங்கள் மீது கவனம் செலுத்துவது உள்நாட்டு பொருளாதாரத்தை மேம்படுத்துகிறது, ஆனால் நீடிக்க முடியாத மீன்பிடி முறைகள், குறிப்பாக அடிமட்ட வலைகள் காரணமாக மீன்களின் எண்ணிக்கை மற்றும் பலவீனமான பவளப்பாறைகள் ஆகியவை பாதிக்கப்படுகின்றன. கடல் பாதுகாப்பு பகுதிக்கு வெளியே வெடிமருந்துகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகள் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளை சீர்குலைக்கிறது, அதே நேரத்தில் வலைகளில் ஆமைகள் தற்செயலாகப் பிடிக்கப்படுவது மற்றும் வீட்டு நாய்களால் வேட்டையாடப்படுவது உயிரியற் பல்வகைமை தொடர்பான கவலைகளை எழுப்புகிறது.

கொமர்ஷல் வங்கி மற்றும் பிற பெருநிறுவனங்களின் ஆதரவுடன், காயங்கேணி பவளப்பாறை திட்டமானது சமூகம் சார்ந்த இணைப்புகளைத் திட்டமிடுதல் மற்றும் உருவாக்குதல், களம் சார்ந்த நடவடிக்கைகளுக்கான உருவாக்கங்கள் மற்றும் பங்குடைமைகளை அடையாளம் கண்டு நிறுவுதல் ஆகியவற்றை உள்ளடக்கும்.


# மாணவர்களை செயற்றிறன் மிக்கவர்களாக்கும் திறன் பலகையூடான கற்றல்




எமது இலங்கை தமிழ் பேசும் மாணவர்கள் உலகத்தரத்திலான கல்வி வழங்கலைப் பெறவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு IMHO-USA மற்றும் Ratnam Foundation UK ஆகிய நிறுவனங்கள் பாடசாலை மாணவர்களுக்காக smart board learning activity unit ஒன்றை வழங்கி smart Classroom இயங்க உதவுகின்றன.

இதற்காக இம்முறை குருநாகல் வலயம், மாகோவலயம் ஆகிய கல்வி வலயங்களில் கல்வி அதிகாரிகளின் துணையுடன் 9 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு திறன் பலகை வழங்கப்பட்டதுடன், ஆசிரியர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டது, போதிய காலப்பகுதி வழங்கப்பட்டு இத்திறன் பலகையுடனான மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை அவதானிக்கக்கூடியதாகக் கடந்த 2024.10.14ஆம் திகதி முதல் 2024.10.16ஆம் திகதி வரை குருநாகல் வலய நான்கு பாடசாலைகளின் வகுப்பறைகளும், மாகோ கல்வி வலயத்தின் ஐந்து பாடசாலைகளின் திறன் வகுப்பறைகளும் உத்தியோகப்பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டதுடன் மகிழ்ச்சியுடன் கற்றல் செயற்பாட்டில் மாணவர்கள் ஈடுபடுவதைக் காணக்கிடைத்தது.

மிகச் சிறப்பாகச் சிறார்கள் திறன்பலகையூடாக கற்றலை மேற்கொண்டனர். ஆசிரியர்கள் மாணவர்களே நேரிடையாக செயற்படுவதற்கு அனுமதித்துக் கற்பித்தமை சிறப்புக்குரியது. இது இவ்வலயங்களின் கல்வி மேம்பாட்டிற்கு நிச்சயம் வழிசமைக்கும்.

















# எழுத்தாளர் மலரன்பனுக்கு 'கலாபிமானி' சாகித்திய விருது



2024ஆம் ஆண்டுக்கான மத்திய மாகாண சிங்கள சாகித்திய விழா வெள்ளிக்கிழமை 22ஆம் திகதி நடைபெற்றது. இவ்விழாவில் சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு, வானொலி நாடகம், மெல்லிசை பாடல்கள், திரைப்படப் பாடல்கள் என பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்பு செய்துள்ள மலையக எழுத்தாளர் மாத்தளை மலரன்பனுக்கு மத்திய மாகாண ஆளுநரின் 'கலாபிமானி' சாகித்திய விருதும் பணப்பரிசிலும் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் சிங்கள இலக்கியவாதிகள்-கலைஞர்களுக்காக வழங்கப்படும் இவ்விருது விழாவில் மலையக தமிழர் என்ற வகையில் மலரன்பன் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். மலரன்பனின் படைப்புகள் சிங்களத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் மட்டுமல்லாது, நூலுருவிலும் வெளிவந்து சிங்கள வாசகர் மத்தியில் விதந்து பேசப்பட்டுள்ளது.

'ஆதர மீனா', 'ஹாலோ மிஸ்டர் மம டிரக்டர்' என்ற இரண்டு சிங்கள திரைப்படங்களில் மலரன்பன் இயற்றிய தமிழ்ப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

பிரபல சிங்கள இயக்குநர் மிச்சேல் பொன்சேகாவின் நெறியாள்கையில் தயாரிக்கப்பட்டு வெகு விரைவில் திரையிடப்படவுள்ள 'அப்பாவிகள்' திரைப்படத்தில் சரத் விக்ரமவின் இசையில் மலரன்பனின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மலரன்பன் தனது நூல்களுக்காக அரச தேசிய சாகித்திய விருத்தை மூன்று முறை பெற்றுள்ளதுடன், மேலும் பல விருதுகளும் பெற்றுள்ளார்.

பதுளை கலை ஒளி முத்தையா பிள்ளை அறக்கட்டளை வெளியீடாகப் பேராசிரியர் மு.நித்தியானந்தன், கலை - இலக்கிய - சமூக செயற்பாட்டாளர் எச்.எச்.விக்ரமசிங்க இருவரும் தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் காத்திரமான நூல் வரிசையில் ஒன்றான மலரன்பனின் மொழிபெயர்ப்பில் வெளிவந்த 'கொலுசா' பிற மொழி சிறுகதைகள் நூல், அரச தேசிய சாகித்திய விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், கொழும்பில் நடைபெறவுள்ள அரச தேசிய சாகித்திய விழாவில் விருது வழங்கப்பட உள்ளது.

மாத்தளை மகாத்மா காந்தி நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற 'கொலுசா' நூல் வெளியீட்டு விழாவில் குறித்த நூலுக்காக சர்வதேச ரோட்டரி கழகத் தலைவர் டாக்டர குமார் இராஜேந்திரன் ஒரு லட்சம் பணப்பரிசும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


பாகிஸ்தான்

### இம்ரான் கானை விடுதலை செய்ய வலியுறுத்தி

# போராட்டத்துக்கு முஸ்தீபு

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான் கானை விடுதலை செய்ய வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் தலைவராகப் பொறுப்பு வகித்து வரும் இம்ரான்கான், தன்னுடைய பிரதமர் பதவிக் காலத்தில், தனக்குக் கிடைத்த பரிசுப் பொருட்களை கருவூலத்தில் சேர்க்காமல் அவரும் அவரது மனைவியும் விற்பனை செய்து சொத்து சேர்த்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.



மேலும், பாகிஸ்தான் தூதுரகம் அனுப்பிய இரகசிய தகவல்களைக் கசிய விட்டதாகக் கூறி தொடரப்பட்ட ‘சிபர்’ வழக்கில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் ‘சிபர்’ வழக்கை விசாரித்து வந்த பாகிஸ்தான் நீதிமன்றம், கடந்த ஜனவரி 30ஆம் திகதியன்று, இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

அத்துடன், பரிசுப் பொருட்களைக் கருவூலத்தில் சேர்க்காமல் விற்று சொத்து சேர்த்த வழக்கில் இம்ரான்கானுக்கு, அவரது மனைவிக்கும் வழங்கப்பட்ட 14 ஆண்டு சிறைத் தண்டனையை இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் நிறுத்தி வைத்து உத்தரவிட்டது.

இதையடுத்து, அரச பரிசுப் பொருட்களை விற்று சொத்து சேர்த்த வழக்கில் தனக்குப் பிணை வழங்கக்கோரி இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில், இம்ரான் கான் மேன்முறையீடு செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணை கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது. அப்போது, முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு பிணை வழங்கி, நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால், இம்ரான் கானுக்கு பிணை வழங்கப்பட்ட ஒரு மணி நேரத்திலேயே, ராவல்பிண்டி பொலிஸார் அவரை கைது செய்தனர். இம்ரான் கான் மீது பயங்கரவாதம் மற்றும் பிற குற்றச்சாட்டுகள் தொடர்பாக நியூடவுன் பொலிஸ் நிலையத்தில் விசாரணை நடைபெற்று வந்தது.

அதன் அடிப்படையில், இம்ரான் கானுக்கு பிணை வழங்கிய ஒரு மணி நேரத்திற்குள்ளே அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், அவரை விடுதலை செய்யக் கோரி இம்ரான்கான் ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அதன் ஒருபகுதியாக, நாடு முழுவதும் அவர்கள் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

அதேபோல், பஞ்சாப் மாகாணத்தில் 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா

# உயரும் எலானின் சொத்து மதிப்பு



டெஸ்லா, ஸ்பேக்ஸ் எக்ஸ் மற்றும் எக்ஸ் ஆகிய நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரியான எலான் மஸ்க் ஏற்கெனவே உலகின் பெரும் செல்வந்தர்களில் ஒருவராக உள்ளார்.

இந்த சூழலில், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுக்குப் பிறகு அவரது சொத்து மதிப்பு இன்னும் உயர்ந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்புக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்து வந்த எலான் மஸ்க், ட்ரம்பின் பிரசாரத்துக்கு பல ஆயிரம் கோடி நிதியையும் வழங்கினார்.

இதன் மூலம் அவர் ட்ரம்புக்கு மிகவும் நெருக்கமான நபராக மாறினார். தேர்தலில் வெற்றிப்பெற்ற டிரம்ப் தனது தலைமையில் அமைய இருக்கும் புதிய அரசில் எலான் மஸ்குக்கு முக்கிய பொறுப்பை வழங்கியுள்ளார். இதன் காரணமாக எலான் மஸ்கின் நிறுவனங்களின் பங்குகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருகின்றன. இதனால் அவரது சொத்து மதிப்பு உயர்ந்து கொண்டே வருகிறது.

தேர்தல் முடிவுகள் வெளியான நாளில் மட்டும் எலான் மஸ்கின் சொத்து 2.19 இலட்சம் கோடி ரூபாய் உயர்ந்ததாகக் கூறப்படுகிறது.

அந்த வகையில், தேர்தலுக்குப் பிறகு அவரது சொத்து மதிப்பு 29 இலட்சம் கோடி ரூபாவைக் கடந்துள்ளதாக போர்ப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரித்தானியா

### மன்னர் சார்லஸ்

# இந்தியாவுக்கு விரைவில் விஜயம்



புற்றுநோயிலிருந்து விடுபட்டுவரும் இங்கிலாந்து மன்னர் 3ஆம் சார்லஸ், பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுவருகிறார்.

அந்தவகையில், மன்னர் சார்லஸும், ராணி கமிலாவும் இந்தியாவுக்கு வரத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கெனவே மன்னரும் ராணியும் இந்தியா வரத் திட்டமிட்டிருந்த நிலையில், ராணி இரண்டாம் எலிசபெத்தின் மரணம் காரணமாக அந்த திட்டம் கைவிடப்பட்டது.

அப்போதே இந்தியப் பிரதமர் மோடியும் மன்னர் மற்றும் ராணிக்கு இந்தியாவில் விருந்தளிக்க விருப்பம் தெரிவித்திருந்திருந்தார்.

இந்த நிலையில், மன்னர் சார்லஸ் - ராணி கமிலா ஆகியோர் அரசு முறை பயணமாக விரைவில் மீண்டும் இந்தியா வருவதாக அந்த நாட்டு ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், அவர்கள் பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசத்துக்கும் செல்வதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அந்த ஊடக செய்தியில், “மன்னர் மற்றும் ராணியின் இந்தியத் துணைக்கண்ட சுற்றுப்பயணத் திட்டம் தயாராக உள்ளது. இது உலக அரங்கில் இங்கிலாந்துக்கு மிகப்பெரிய அரசியல் மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். மன்னர் மற்றும் ராணிக்கு இது போன்ற திட்டங்களை உருவாக்க முடிவது மிகவும் ஊக்கமளிக்கிறது. இது அவர்களுக்கு மிகவும் உற்சாகமாக உள்ளது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மும்பை

### மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில்

# பா.ஜ.க. வெற்றி; யார் முதல்வர்?

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலில், பா.ஜ.க. கூட்டணி 230 தொகுதிகளைக் கைப்பற்றி சாதனை வெற்றி பெற்றுள்ளது.

புதிய முதல்வர் யார் என்பதை பாஜக, சிவசேனாவின் ஷிண்டே அணி, தேசியவாத காங்கிரஸின் அஜித் பவார் அணி ஆகிய 3 கட்சிகளும் இணைந்து முடிவு செய்து அறிவிக்கவுள்ளன.

இதன்படி, பா.ஜ.க. மூத்த தலைவர் தேவேந்திர பட்னாவிஸ், புதிய முதல்வராக நியமிக்க வாய்ப்பு நிலவுகிறது.

மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவை தேர்தல், மொத்தம் உள்ள 288 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாகக் கடந்த 20ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

வாக்கு எண்ணிக்கை பணி, சனிக்கிழமை (23) நடைபெற்றது. இதில் ஆரம்பம் முதலே பாஜக



தலைமையிலான மகாயுதி கூட்டணி முன்னிலை வகித்தது. இதில், பா.ஜ.க. 132 தொகுதிகளைக் கைப்பற்றி அபார வெற்றிபெற்றுள்ளது.

ஜார்க்கண்ட்

### ஜார்க்கண்ட் தொகுதியை

# மீண்டும் கைப்பற்றினார் ஹேமந்த்

ஜார்க்கண்ட் சட்டப்பேரவை தேர்தலில், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜேஎம்எம்) தலைமையிலான இண்டியா கூட்டணி, பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

இதன்மூலம், ஜே.எம்.எம். கட்சித் தலைவர் ஹேமந்த் சோரன் மீண்டும் முதல்வராகிறார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள 81 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் கடந்த 13, 20ஆம் திகதிகளில் 2 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற்றது.

இதில், இண்டியா



கூட்டணியில் ஜேஎம்எம் 34, காங்கிரஸ் 16, ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி) 4, இந்திய கம்யூனிஸ்ட் (எம்எல்-எல்) 2 தொகுதிகளில் வெற்றி பெற்றன. ஒட்டுமொத்தமாக இண்டியா கூட்டணி 56 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பா.ஜ.க. 21, ஜார்க்கண்ட் மாணவர் கூட்டமைப்பு 1, லோக் ஜன சக்தி 1, ஐக்கிய ஜனதா தளம் 1 தொகுதியில் வெற்றி பெற்றன. அந்த கூட்டணிக்கு 24 தொகுதிகள் கிடைத்துள்ளன.

கடந்த சட்டப்பேரவை தேர்தலில் 25 தொகுதிகளில் வெற்றி பெற்ற பா.ஜ.கவுக்கு, தற்போது 21 இடங்கள் மட்டுமே கிடைத்திருப்பது பின்னடைவாக அமைந்துள்ளது.

### அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்ட்டில்

# ஆதிக்கம் செலுத்தும் இந்தியா



அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டின் மூன்றாம் நாள் முடிவில் இந்தியா ஆதிக்கம் செலுத்துகிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், பேர்த்தில் வெள்ளிக்கிழமை (22) ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஜொஷ் ஹேசில்வூட்(4), மிற்செல் மார்ஷ் (2), மிற்செல் ஸ்டார்க், அணித்தலைவர் பற் கமின்ஸிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 150 ஓட்டங்களையே தமது முதலாவது இனிங்ஸில் பெற்றது. துடுப்பாட்டத்தில் நிதிஷ் குமார் ரெட்டி 41, றிஷப் பண்ட் 37, லோகேஷ் ராகுல் 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, அணித்தலைவர் ஜஸ்பிரிட் பும்ரா (5), ஹர்ஷித் ரானா (3), மொஹமட் சிராஜ்ஜிடம் (2) அடிபணிந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 104 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் ஸ்டார்க் 26, அலெக்ஸ் காரி 21 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, யஷஸ்வி ஜைஸ்வாலின் 161, விராட் கோலியின் ஆட்டமிழக்காத 100, ராகுலின் 77, ரெட்டியின் ஆட்டமிழக்காத 38, வொஷிங்டன் சுந்தரின் 29, தேவ்டுட் படிக்கல்லின் 25 ஓட்டங்களோடு 6 விக்கெட்டுகளை இழந்து 487 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. பந்துவீச்சில் நேதன் லையன் 2, ஹேசில்வூட், மார்ஷ், கமின்ஸ், ஸ்டார்க் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

அந்தவகையில், 534 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலியா, பும்ரா (2), சிராஜ்ஜிடம் விக்கெட்டுகளை இழந்து நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 12 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் உஸ்மான் கவாஜா ஆட்டமிழக்காமல் 3 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.



### ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# சமநிலையில் பார்சிலோனா செல்டா விகோ போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், செல்டா விகோவின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (24) நடைபெற்ற அவ்வணிக்கும் பார்சிலோனாவுக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பார்சிலோனா சார்பாக றபீனியா, றொபேர்ட் லெவன்டோஸ்கி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். விகோ சார்பாக அல்ஃபோன்ஸோ கொன்ஸலேஸ், ஹியூகோ அல்வரேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

# நான்காவது தடவையாக சம்பியனான வெர்ஸ்டப்பன்



தொடர்ச்சியாக நான்காவது தடவையாக றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் சம்பியனாகியுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (24) நடைபெற்ற லாஸ் வேகாஸ் குரான் பிறீயில் ஐந்தாமிடத்தைப் பெற்று இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 403 புள்ளிகளைப் பெற்று தனக்கும் பட்டியலில் இரண்டாமிடத்திலுள்ள லான்டோ நொரிஸுக்குமிடையிலான வித்தியாசத்தை எஞ்சியிருக்கின்ற இரண்டு பந்தயங்களில் பெறக்கூடிய 60 புள்ளிகளுக்கும் அதிகமாக்கியதைத் தொடர்ந்தே நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பன் சம்பியனாகியுள்ளார்.

இப்பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த மெர்சிடீஸ் அணியின் ஜோர்ஜ் ரஸல் முதலாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை 10ஆம் இடத்திலிருந்து ஆரம்பித்த அவரின் சக மெர்சிடீஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த பெராரி அணியின் கார்லோஸ் சைன்ஸ் ஜூனியர் மூன்றாமிடத்தைப்பெற்றார்.

### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சிற்றியை வீழ்த்திய டொட்டென்ஹாம்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை(23) நடைபெற்ற டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியில் 0-4 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

டொட்டென்ஹாம் சார்பாக ஜேம்ஸ் மடின்ஸன் இரண்டு கோல்களையும், பெட்ரோ பொறோரோ, பிரெனன் ஜோன்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை, லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் செல்சி வென்றது. செல்சி சார்பாக நிக்கொலஸ் ஜக்சன், என்ஸோ பெர்ணாண்டஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, லெய்செஸ்டர் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோர்டான் அயூ பெற்றிருந்தார்.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற பிரென்ஃபோர்ட்டுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் சமப்படுத்தியது.

### இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் மிலன் ஜுவென்டஸ் போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஏ.சி. மிலனின் மைதானத்தில் சனிக்கிழமை(23) நடைபெற்ற அவ்வணிக்கும் ஜுவென்டஸுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 25 நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.